**செய்தி வெளியீடு எண்:289** **நாள் :17.06.2015**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 16.6.2015 அன்று தலைமைச் செயலகத்தில், வேளாண்மைத் துறை சார்பில் திருநெல்வேலி மாவட்டம் – பாவூர்சத்திரத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 1000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மிளகாய் குளிர்பதன கிடங்கினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 66 கோடியே 68 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான நவீன சேமிப்பு கிடங்குகள், அக்மார்க் ஆய்வகக் கட்டடங்கள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், இளநீர் வணிக வளாகம், பரிவர்த்தனைக் கூடங்கள், தேயிலை பூங்கா, வண்ணத்துப் பூச்சி பூங்கா, உழவர் மையம், மாநில பூச்சிகொல்லி மருந்து ஆய்வகங்கள் உள்ளிட்ட பல்வேறு வேளாண் கட்டடங்களை திறந்து வைத்து, 1 கோடியே 83 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய் செலவிலான 29 ஜீப்புகளை தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறைகளின் துணை இயக்குநர்களின் அலுவலகப் பயன்பாட்டிற்காக வழங்கினார்கள்.

நாட்டின் முதன்மைத் தொழிலாகவும், ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாகவும், கிராமப்புற மக்களின் வாழ்வுக்கு ஆதாரமாகவும் விளங்குகின்ற வேளாண் தொழிலை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், திருநெல்வேலி மாவட்டம் – பாவூர்சத்திரத்தில் 22,927 சதுர அடி பரப்பளவில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 1000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மிளகாய் குளிர்பதன கிடங்கினை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், கடலூர் மாவட்டம் – காட்டுமன்னார்கோயில், விழுப்புரம் மாவட்டம் – கள்ளக்குறிச்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – துவரங்குறிச்சி, திருநெல்வேலி மாவட்டம் – அம்பாசமுத்திரம், தேனி மாவட்டம் – போடிநாயக்கனூர், தருமபுரி மாவட்டம் – பென்னாகரம் ஆகிய இடங்களில் 7 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 6 நவீன சேமிப்பு கிடங்குகள்;

விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, கோயம்புத்தூர், வேலூர், திருச்சிராப்பள்ளி, ஈரோடு, தருமபுரி, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் 19 கோடியே 79 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 17 குளிர்பதன கிடங்குகள்;

கோயம்புத்தூர் மாவட்டம் – அன்னூர், தொண்டாமுத்தூர், பொள்ளாச்சி, கிணத்துக்கடவு மற்றும் காரமடை; திண்டுக்கல் மாவட்டம் – திண்டுக்கல், நத்தம், பழனி, வத்தலகுண்டு மற்றும் ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களில் 3 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 10 தரம் மதிப்பிடுதல் மற்றும் பிரித்தல் கூடங்கள்;

தூத்துக்குடி மாவட்டம் – தூத்துக்குடி, கடலூர் மாவட்டம் – பண்ருட்டி, ஈரோடு மாவட்டம் – பெருந்துறை, திருப்பூர் மாவட்டம் – காங்கேயம் ஆகிய இடங்களில் 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 அக்மார்க் ஆய்வகக் கட்டடங்கள்;

தேனி மாவட்டம் – போடிநாயக்கனூர் மற்றும் ஈரோடு மாவட்டம் – பவானி ஆகிய இடங்களில் 2 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள்;

திருவண்ணாமலை மாவட்டம் – வந்தவாசி, ஆரணி மற்றும் போளூர், தருமபுரி மாவட்டம் – தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டம் – கிருஷ்ணகிரி, திருப்பூர் மாவட்டம் – வெள்ளகோயில் ஆகிய இடங்களில் 5 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 பரிவர்த்தனைக் கூடங்கள்;

கிருஷ்ணகிரி மாவட்டம் – போச்சம்பள்ளி, நாமக்கல் மாவட்டம் – புதன்சந்தை, கோயம்புத்தூர் மாவட்டம் – பூலுவாப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம் – வேடசந்தூர், மதுரை மாவட்டம் – மணியஞ்சி, ஈரோடு மாவட்டம் – கவுந்தப்பாடி, சேலம் மாவட்டம் – தாரமங்கலம், விழுப்புரம் மாவட்டம் – மூங்கில்துறைப்பட்டு, திருநெல்வேலி மாவட்டம் – பாவூர்சத்திரம் ஆகிய இடங்களில் 2 கோடியே 16 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 9 கிராமிய சந்தைகளுக்கான தரம் பிரித்தல் கூடங்கள்;

தமிழ்நாட்டில் முதன் முறையாக கோயம்புத்தூர் மாவட்டம் – திப்பம்பட்டியில் 3 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இளநீர் வணிக வளாகம்; கடலூர் மாவட்டம் – கடலூர், திருநெல்வேலி மாவட்டம் – பாவூர்சத்திரம், இராமநாதபுரம் மாவட்டம் – பரமக்குடி ஆகிய இடங்களில் 4 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 வணிகர் கடைகள்;

கோயம்புத்தூர் மாவட்டம் – கிணத்துக்கடவு, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – நாவலூர்குட்டப்பட்டு ஆகிய இடங்களில் 2 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 உணவு பதப்படுத்துதல் மற்றும் பயிற்சிக்கூடங்கள்;

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் நீலகிரி மாவட்டம் – தொட்டபெட்டாவில் 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள தேயிலை பூங்கா மற்றும் தேவாலாவில் 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள வண்ணத்துப் பூச்சி பூங்கா; இராமநாதபுரம் மாவட்டம் – அச்சடிப்பிரம்பில் 7 கோடியே 29 லட்சத்து 22 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள மரபணு பூங்கா;

புதுக்கோட்டை மாவட்டம் – புதுக்கோட்டையில் 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தோட்டக்கலை தகவல் பயிற்சி மையம்; ஈரோடு மாவட்டம் – சத்தியமங்கலத்தில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உழவர் மையம்; புதுக்கோட்டை மாவட்டம் – குடுமியான்மலையில் 1 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நுண்ணூட்டக் கலவை சேமிப்புக் கிடங்கு; சேலத்தில் 59 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உரக் கட்டுப்பாட்டு ஆய்வகம்;

ஈரோடு, சேலம், வேலூர், திருச்சிராப்பள்ளி, கடலூர், மதுரை ஆகிய இடங்களில் 3 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாநில பூச்சிகொல்லி மருந்து ஆய்வகங்கள்;

என மொத்தம் 68 கோடியே 68 லட்சத்து 62 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான வேளாண்மைத் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்திய அளவில் தற்போது 68 பூச்சிகொல்லி மருந்து ஆய்வகங்கள் தான் இயங்கி வருகின்றன. 16.6.2015 அன்று திறக்கப்பட்ட 6 பூச்சிகொல்லி மருந்து ஆய்வகங்களையும் சேர்த்து தமிழ்நாட்டில் மட்டும் 15 பூச்சிகொல்லி மருந்து ஆய்வகங்கள் உள்ளன. இதன்மூலம், பூச்சிகொல்லி மருந்து ஆய்வகங்களைப் பொறுத்தவரை தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆகிய துறைகளின் கீழ் இயங்கும் மாவட்ட அளவிலான துணை இயக்குநர்களின் அலுவலகப் பயன்பாட்டிற்காக 1 கோடியே 83 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 29 ஜீப்புகளை வழங்கும் அடையாளமாக

2 ஓட்டுநர்களுக்கு வாகனத்திற்கான சாவியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் வேளாண்மைத் துறையின் சார்பில் திறந்து வைக்கப்பட்ட கட்டடங்கள் மற்றும் வழங்கிய ஜீப்புகளின் மொத்த மதிப்பு 70 கோடியே 52 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் ஆகும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் திரு ஆர். வைத்திலிங்கம், தலைமைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), வேளாண்மைத் துறைச் செயலாளர் திரு ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., வேளாண்மைத் துறை இயக்குநர் முனைவர் மு. ராஜேந்திரன், இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் திரு லி. சித்ரசேனன், இ.ஆ.ப., வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் திரு செ. மனோகரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 17.6.2015